www.StudyGuideIndia.com

**7758**

Register Number

**Part III**

# வரலாறு / HISTORY

( Tamil Version )

நேரம் : 3 மணி ]

[ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

*குறிப்பு :* அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 45 × 1 = 45

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக :

1. கார்ன் வாலிஸ் பிரபு அறிமுகப்படுத்தியது

அ) மகல்வாரி முறை

ஆ) நிலையான நிலவரித்திட்டம்

இ) இரயத்துவாரி முறை

ஈ) ஜாகீர்தாரி முறை.

2. 1798 ல் வெல்லெஸ்லி பிரபுவின் துணைப்படைத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட முதல் அரசு

அ) அயோத்தி

ஆ) தஞ்சாவூர்

இ) சூரத்

ஈ) ஹைதராபாத்.

[ Turn over

www.StudyGuideIndia.com

3. ஹேஸ்டிங்ஸ் பிரபு நேபாளத்தின் மீது போர் தொடுத்த ஆண்டு

அ) 1814

ஆ) 1815

இ) 1816

ஈ) 1817.

4. முதல் பர்மியப் போரின் முடிவில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை யாது ?

அ) சிந்துவில் படகு போக்குவரத்து

ஆ) சகௌலி

இ) யாண்டபூ

ஈ) பூனா.

5. எந்த மாகாண ஆட்சிக்கு லாரன்ஸ் சகோதரர்கள் சேவையாற்றினார்கள் ?

அ) பர்மா

ஆ) பஞ்சாப்

இ) வங்காளம்

ஈ) மைசூர்.

6. நெல்கட்டும் செவல் பகுதியை கைப்பற்றியவர்

அ) கர்னல் ஹெரான்

ஆ) கர்னல் கேம்ப்பெல்

இ) காலின் ஜாக்சன்

ஈ) புலித்தேவர்.

www.StudyGuideIndia.com

7. இந்தியாவின் முதல் வைஸ்ராய் ( Viceroy )

அ) வாரன் ஹேஸ்டிங்ஸ்

ஆ) டல்ஹவுசி பிரபு

இ) கானிங் பிரபு

ஈ) ரிப்பன் பிரபு.

8. பின்வருபவர்களில் அலிகார் இயக்கத்தை தொடங்கியவர் யார் ?

அ) சர் சையது அகமதுகான்

ஆ) சலிமுல்லாகான்

இ) முகமது அலி ஜின்னா

ஈ) முகமது அல்-ஹாசன்.

9. முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1906

ஆ) 1909

இ) 1916

ஈ) 1926.

10. பின்வருபவர்களில், 1857 ஆம் ஆண்டு கலகத்தை முதல் இந்திய விடுதலைப் போர் என்று கருதியவர் யார் ?

அ) சர் ஜான் லாரன்ஸ்

ஆ) வீரசவார்க்கர்

இ) எஸ். என். சென்

ஈ) ஆர். சி. மஜூம்தார்.

[ Turn over

www.StudyGuideIndia.com

11. இந்திய தேசிய காங்கிரசை தோற்றுவித்தவர்

அ) டபிள்யூ. சி. பானர்ஜி

ஆ) ஏ. ஓ. ஹியூம்

இ) மகாத்மா காந்தி

ஈ) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்.

12. கேடா சத்யாகிரகத்தை காந்தி யாரை ஆதரிப்பதற்காக தொடங்கினார் ?

அ) அவுரிப் பண்ணையாளர்கள்

ஆ) ஆலைத் தொழிலாளர்கள்

இ) குடியானவர்கள்

ஈ) தொழிற்சாலை பணியாளர்கள்.

13. வேதாரண்யம் உப்பு சத்யாகிரகத்திற்கு தலைமையேற்றவர் .

அ) காந்திஜி

ஆ) ராஜாஜி

இ) வ. உ. சி

ஈ) காமராஜ்.

14. முதலாவது இந்திய தொழில்நுட்ப கழகம் துவங்கப்பட்ட இடம்

அ) கான்பூர்

ஆ) பம்பாய்

இ) சென்னை

ஈ) கரக்பூர்.

15. சட்டமன்றங்களுக்கான தேர்தலை சட்டபூர்வமாக ஏற்றுக்கொண்ட சட்டம் எது ?

அ) 1861 ஆம் ஆண்டு சட்டம்

ஆ) 1892 ஆம் ஆண்டு சட்டம்

இ) 1909 ஆம் ஆண்டு சட்டம்

ஈ) 1919 ஆம் ஆண்டு சட்டம்.

www.StudyGuideIndia.com

16. நவீன இந்தியாவின் சிற்பி என்று கருதப்பட்டவர்

அ) ராஜாஜி

ஆ) பாலகங்காதர திலகர்

இ) ஜவஹர்லால் நேரு

ஈ) சர்தார் வல்லபாய் படேல்.

17. தென்னிந்திய நல உரிமைச்சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

அ) 1912

ஆ) 1914

இ) 1916

ஈ) 1917.

18. பின்வருவனவற்றுள் குடிபெயர்ந்தோர் குடியேற்றம் எது ?

அ) பிரிட்டிஷ் இந்தியா

ஆ) இந்தோ-சீனா

இ) 13 அமெரிக்கக் குடியேற்றங்கள்

ஈ) இந்தோனேசியா.

19. ஐ. நா. சபையின் தலைமையிடம் அமைந்துள்ளது

அ) ஜெனீவா

ஆ) தி ஹேக்

இ) நியூயார்க்

ஈ) சான்பிரான்சிஸ்கோ.

20. கெடுபிடிப்போர் எனும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியவர்

அ) பெர்னார்ட் பரோச்

ஆ) எஃப். டி. ரூஸ்வெல்ட்

இ) ஸ்டாலின்

ஈ) சர்ச்சில்.

www.StudyGuideIndia.com

II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களை சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக :

21. இரட்டையாட்சியை அறிமுகப்படுத்தியவர் ................... .

22. மகல்வாரி முறையின் கீழ் நிலவரித்திட்டத்தின் அடிப்படை அலகு ................... .

23. பகிஷ்கிரிட் ஹிடாகாரிணி சபையை அமைத்தவர் ................... .

24. வேலூர் கோட்டையின் இராணுவத் தளபதி ................... .

25. மூன்றாம் பானிப்பட்டுப் போர் நடைபெற்ற ஆண்டு ................... .

26. ஆரிய சமாஜத்தை தோற்றுவித்தவர் ................... .

27. முழுச்சுதந்திரம் பற்றிய தீர்மானம் இயற்றப்பட்ட இடம் ................... .

28. இந்தியாவின் இரும்பு மனிதர் ................... .

29. உலக வர்த்தக மையத்தின் தலைமையிடம் உள்ள இடம் ...................

30. மின்சார விளக்கை கண்டுபிடித்தவர் ................... .

III. நிரல் 'அ' வின் கீழ் உள்ளவற்றை நிரல் 'ஆ' உடன் பொருத்துக.

| | 'அ' | | 'ஆ' |
|---|---|---|---|
| 31. | சரபோஜி | அ) | லாலா லஜபதிராய் |
| 32. | மஸ்லீன் | ஆ) | டி ஆலம்பர்ட் |
| 33. | பஞ்சாப் சிங்கம் | இ) | தஞ்சாவூர் |
| 34. | ஜான் கேபட் | ஈ) | டாக்கா |
| 35. | கலைக்களஞ்சியம் | உ) | நியூபவுண்ட்லாந்து |

www.StudyGuideIndia.com

IV. 36. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் 1774 ல் வில்லியம் கோட்டையில் ஆளுநராக பதவியேற்றார்.

ஆ) வாரன்ஹேஸ்டிங்ஸ் ஆட்சிக் காலத்தில் ரோகில்லாப் போர் நடைபெற்றது.

இ) ஒழுங்குமுறைச் சட்டத்தின் படி இயக்குநர்கள் மன்றத்தின் ஆயுட்காலம் ஐந்து ஆண்டுகளாகும்.

ஈ) ராஜா செயித்சிங் அயோத்தியின் ஆட்சியாளர் ஆவார்.

37. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) வேலூர் கலகத்திற்கு புதிய இராணுவ விதிமுறைகள் முக்கிய காரணம்.

ஆ) வேலூர் கோட்டையில் திப்புவின் குடும்பம் சிறை வைக்கப்படவில்லை.

இ) திப்புவின் மகன் பிரான்சின் உதவியை நாடவில்லை.

ஈ) கலகத்திற்குப் பின் திப்புவின் மகன்கள் பெனாங்கிற்கு கைதிகளாக அனுப்பப்பட்டனர்.

38. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) ஜனாதிபதி நாட்டின் அரசியலமைப்பு ரீதியான தலைவர்.

ஆ) துணை ஜனாதிபதியை தலைவராகக் கொண்டு திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டது.

இ) இந்திராகாந்தி அணு ஆய்வு மையம் நெய்வேலியில் உள்ளது.

ஈ) ஐ. எஸ். ஆர். ஓ. ( ISRO ) செயற்கைக்கோள் மையம் மங்களூரில் உள்ளது.

[ Turn over

www.StudyGuideIndia.com

39. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) ரஷ்யாவில் பிப்ரவரி புரட்சிக்கு தலைமையேற்றவர் லெனின்

ஆ) மென்ஷ்விக் அரசாங்கம் கெரன்ஸ்கி தலைமையில் அமைக்கப்பட்டது

இ) போல்ஷ்விக் கட்சி மிதவாத அரசியல் இயக்கமாகும்

ஈ) இரண்டாம் சார் நிக்கோலஸ் மென்ஷ்விக்குகளை ஆதரித்தார்.

40. சரியான குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.

அ) தைப்பிங் கலகத்தை டாக்டர் சன் யாட்சென் தலைமையேற்று நடத்தினார்.

ஆ) 1911ம் ஆண்டு புரட்சிக்குப் பின் மாசேதுங் சீனாவின் அதிபரானார்.

இ) மெய்ஜி மீட்சிக்குப் பின் ஜப்பான் நவீன மயமாக்கப்பட்டது.

ஈ) ஜி-8 அமைப்பில் ஜப்பான் உறுப்பினராக இல்லை.

V. கீழ்க்காணும் கூற்றுகளில் எது **சரி**, எது **தவறு** என்பதனைக் குறிப்பிடுக.

41. ஆங்கிலக் கிழக்கிந்திய வணிகக்குழு 1600 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் நிறுவப்பட்டது.

42. இராமகிருஷ்ணரின் உண்மையான பெயர் நரேந்திரநாத் தத்தா.

43. இலவச மற்றும் கட்டாயக் கல்வியை நீதிக்கட்சி அறிமுகம் செய்தது.

44. அச்சு இயந்திரத்தை முதலில் கண்டறிந்தவர் வில்லியம் காக்ஸ்டன்.

45. 'மெய்ன் கேம்ப்' என்ற நூலை ஹிட்லர் எழுதினார்.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஆ

VI. *குறிப்புகள் :* i) ஏதேனும் **பதினைந்து** வினாக்களுக்கு மட்டும் சிறுகுறிப்பு வரைக.

ii) ஒவ்வொன்றிற்கும் **மூன்று குறிப்புகள்** அளித்தல் வேண்டும்.

15 × 3 = 45

46. ஸ்ரீரங்கப்பட்டிணம் உடன்படிக்கை

47. மெக்காலே பிரபு

48. இரயத்துவாரி முறை

49. பெண் சிசுக்கொலை

50. புலித்தேவர்

51. 1857-ஆம் ஆண்டு பெருங்கலகத்தின் தோல்விக்கான காரணங்கள்

52. சுவாமி விவேகானந்தர்

53. தாதாபாய் நௌரோஜி

54. வங்கப் பிரிவினை

55. சுயராஜ்யக் கட்சி

56. சுப்ரமண்ய பாரதி

57. பேரரசியின் அறிக்கை

58. பஞ்சசீலம்

59. பசுமைப் புரட்சி

[ Turn over

www.StudyGuideIndia.com

60. பிட் இந்திய சட்டம்

61. இயேசு சபை

62. மெய்ஜி முன்னிலை மீட்சி

63. செர்பு நிகழ்ச்சி

64. ஜான் மெக்காடம்

65. நேட்டோ.

## பகுதி - இ

VII. *குறிப்புகள் :* i) பின்வருவனவற்றில் ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக. அவற்றில் வினா எண் **77**-க்கு **கட்டாயமாக** விடையளித்தல் வேண்டும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 100 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக. $10 \times 6 = 60$

66. அ) மூன்றாம் மைசூர் போருக்கான காரணங்களை விவாதிக்க.

*அல்லது*

ஆ) துணைப்படைத்திட்டத்தின் முக்கிய கூறுகளை குறிப்பிடுக.

67. அ) மராட்டிய கூட்டிணைவின் வீழ்ச்சிக்கான காரணங்களை குறிப்பிடுக.

*அல்லது*

ஆ) 1833 ஆம் ஆண்டு பட்டயச்சட்டத்தின் முக்கிய பிரிவுகளை விவாதிக்க.

www.StudyGuideIndia.com

68. அ) நிலையான நிலவரித்திட்டத்தின் சிறப்பு கூறுகளை குறிப்பிடுக.

*அல்லது*

ஆ) சார்லஸ் வுட் அறிக்கை பற்றி குறிப்பு வரைக.

69. அ) வேலூர் கலகத்தின் போக்கினை விவரி.

*அல்லது*

ஆ) இராமலிங்க அடிகளின் கொள்கைகளை விவரி.

70. அ) மிதவாதிகளின் கோரிக்கைகள் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

*அல்லது*

ஆ) சுதேசி இயக்கத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துக.

71. அ) 1801 ஆம் ஆண்டு தென்னிந்திய கலகத்தைப் பற்றி ஒரு குறிப்பு எழுதுக.

*அல்லது*

ஆ) நேரு அறிக்கையின் கூறுகளை விவாதி.

72. அ) தேசிய இயக்கத்தில் வ. உ. சி. யின் பங்கினை பற்றி விவாதிக்க.

*அல்லது*

ஆ) நீதிக்கட்சியின் கல்வி சீர்திருத்தங்களை விவரி.



www.StudyGuideIndia.com

73. அ) 1858 ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.

*அல்லது*

ஆ) இந்திய அரசியலமைப்பின் சிறப்பு கூறுகளைப் பற்றி விவாதி.

74. அ) இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றுவதற்கான காரணங்களைக் கூறுக.

*அல்லது*

ஆ) புவியியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்களை ஆய்க.

75. அ) சமய சீர்திருத்தத்தின் விளைவுகளை மதிப்பிடுக.

*அல்லது*

ஆ) தொழிற்புரட்சிக்கான காரணங்களைக் கூறுக.

76. அ) பன்னாட்டுக் கழகம் அமைக்கப்பட்டதை தொகுத்து கூறுக.

*அல்லது*

ஆ) இத்தாலியில் பாசிசம் தோன்றி வளர்ந்ததற்கான காரணங்களைக் கூறுக.

77. அ) ரஷ்யப் புரட்சியில் லெனின் பங்கினைக் குறித்து விவாதி.

*அல்லது*

ஆ) சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சிகளை விவாதி.

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

VIII. *குறிப்புகள் :* i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. அவற்றுள் வினா எண். **84**-க்கு கட்டாயமாக விடை தருதல் வேண்டும்.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 200 வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக. 5 × 10 = 50

78. அ) "பெண்டிங் பிரபு சமூக சீர்திருத்தங்கள் காலத்தை தொடங்கி வைத்தார்" - கருத்துக் கூறுக.

*அல்லது*

ஆ) டல்ஹௌசி பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.

79. அ) 1857 ஆம் ஆண்டு பெருங்கலகத்திற்கான காரணங்கள் யாவை ?

*அல்லது*

ஆ) ரிப்பன் பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.

80. அ) இந்தியாவில் தேசியம் தோன்றுவதற்கான காரணங்களை ஆய்க.

*அல்லது*

ஆ) தமிழ்நாட்டில் நீதிக்கட்சி ஆட்சியின் சாதனைகளை ஆய்க.



www.StudyGuideIndia.com

81. அ) இந்திய விடுதலை இயக்கத்தில் மகாத்மா காந்தியின் பங்கை மதிப்பிடுக.

அல்லது

ஆ) ஐந்தாண்டுத் திட்டங்கள் மூலம் இந்தியா வளர்ச்சி பெற்றதை விவரி.

82. அ) அமெரிக்க விடுதலைப்போருக்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சிகளை ஆய்க.

அல்லது

ஆ) 1789 ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணங்களை ஆய்க.

83. அ) இரண்டாம் உலகப்போருக்கான காரணங்களை தொகுத்து எழுதுக.

அல்லது

ஆ) உலக அமைதியைக் காப்பதில் ஐ. நா. சபையின் பங்கினை மதிப்பிடுக.

84. அ) இந்திய வரைப்படத்தில் கீழ்கண்ட ஐந்து இடங்களை சுட்டிக் காட்டுக :

i) அயோத்தி

ii) கொல்கத்தா

iii) சென்னை

iv) பஸ்சீன்

v) தஞ்சாவூர்.

வெல்லெஸ்லியின் கீழ் ஆங்கிலேய இருப்பிடங்களை சுட்டிக் காட்டுக.

அல்லது

www.StudyGuideIndia.com

ஆ) 1850 முதல் 1900 வரை நடைபெற்ற விடுதலைப் போர் நிகழ்ச்சிகளில் ஐந்தினைக் காலக்கோடு காட்டி வரைக.

*அல்லது*

இ) முதல் உலகப்போரின் போது நிகழ்ந்த ஐந்து முதன்மை நிகழ்ச்சிகளை காலக்கோடு காட்டி வரைக.

www.StudyGuideIndia.com

www.StudyGuideIndia.com